**June 24, 2011**

## Honble Chief Minister chaired a meeting on providing free milch cow and goats as announced in the Election manifesto




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (24.6.2011) தலைமைச் செயலகத்தில், தேர்தல் அறிக்கையில் அறிவித்தப்படி இலவச கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், கால்நடைத் துறை அமைச்சர், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலாளர், பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை செயலாளர், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.